


திருச்சியில் பேரறிஞர் அண்ணாவின் 56 வது நினைவு நாளை முன்னிட்டு சத்திரம் பேருந்து நிலையத்திலும்,கலைஞர் அறிவாலயத்திலும் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு , பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் அன்பில் பெரியசாமி, கே.என்.சேகரன், நன்னியூர் ராஜேந்திரன், வழக்கறிஞர் பாஸ்கர், டோல்கேட் சுப்பிரமணி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆனந்த், மாவட்ட துணைச் செயலாளர் விஜயா ஜெயராஜ், கருணாநிதி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன் மற்றும் கோட்டத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, கழக நிர்வாகிகள், கலைச்செல்வி குமரவேல், ராமதாஸ் பி.ஆர்.பாலசுப்ரமணியன் புஷ்பராஜ், ஸ்ரீனிவாச பெருமாள், துபேல் அஹமத் கருத்து கதிரேசன் வா மடம் சுரேஷ் , கருமண்டபம் சுரேஷ் பரமசிவம் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 56வது நினைவு நாளை முன்னிட்டு, கள்ளக்குறிச்சி நகராட்சி மந்தைவெளி திடலில் உள்ள அண்ணாவின் திருவுருவச் சிலைக்கு பொதுப்பணி, நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார். உடன் தெற்கு மாவட்டக் கழகச் செயலாளர் வசந்தம் க.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள், தொண்டர்கள் அஞ்சலி செலுத்தினர்.

## திராவிட மாடல் அரசு, விவசாயிகளின் நலன் கருதியே முடிவெடுக்கிறது!

# நெல் கொள்முதல் குறித்து தவறான தகவல் தருவதா?

## டாக்டர் இராமதாசுக்கு – அமைச்சர் அர.சக்கரபாணி விளக்கம்!

சென்னை, பிப்.4-

நெல் கொள்முதல் பற்றித் தவறான தகவல் தந்த பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் டாக்டர். இராமதாசுக்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல்துறை அமைச்சர் அர.சக்கரபாணி பதில றிக்கை வருமாறு:-

தமிழ்நாட்டில் 1.10.2002 முதல் ஒன்றிய அரசின் பரவலாக்கப்பட்ட நெல் கொள்முதல் திட்டம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது. ஒன்றிய அரசின் முகவராக தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் செயல்பட்டு விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல் கொள்முதல் செய்து அதனை அரிசியாக மாற்றம் செய்து மத்திய தொகுப்பில் ஈடுசெய்து, பொது விநியோகத் திட்டத்தி ல் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் டெல்டா மாவட்டங்களில் தான் நெல் கொள்முதல் திட்டம் முதலில் செயல்படுத்தப்பட்டது. டெல்டா அல்லாத மாவட்டங்களின் நெல் விவசாயிகளின் நலன் கருதி டெல்டா அல்லாத மாவட்டங்களிலும் நெல் கொள்முதல் பணி விரிவுபடுத்தப்ப ட்டது. அதன்படி டெல்டா அல்லாத பிற மாவட்டங்களில் விளையும் நெல் மணிகளும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் கொள்முதல் செய்யப்படுகிறது.

### மாநில அரசால் அனுமதி!

டெல்டா அல்லாத மாவட்டங்களில் 2007-2008 கொள்முதல் பருவத்திலிருந்து கூட்டுறவு விற்பனைச் சங்கங்களுக்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கும் நெல் கொள்முதல் செய்ய மாநில அரசால் அனுமதி வழங்கப்பட்டது. 1.3.2012 அன்று ஒன்றிய அரசு எழுதிய கடிதத்தின் அடிப்படையிலும், தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையத்தின் (NCCF) மேலாண்மை இயக்குநரின் 4.4.2013 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையிலும் டெல்டா அல்லாத மாவட்டங்களில் நேரடி கொள்முதல் நிலையம் திறந்து, விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் மேற்கொள்ள 14.2.2014 அன்று தமிழ்நாடு அரசாணை மூலம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.



அதன்படி 2016-ஆம் ஆண்டிலிருந்து தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் டெல்டா அல்லாத மாவட்டங்களில் தேவையைக் கருதி நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்து நெல் கொள்முதல் செய்ய மாவட்ட நிர்வாகம் அனுமதி வழங்கி வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றவுடன் மாவட்டங்களில் நெல் கொள்முதல் நிலையங்கள் திறந்திடுவதை முறைப்படுத்திட மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் இரண்டு விவசாயிகள், வேளாண்மை இணை இயக்குநர், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப்பதிவாளர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மண்டல / மண்டல மேலாளர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) ஆகியோர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. இக்குழு தேவையான இடங்களில் உடனுக்குடன் நெல் கொள்முதல் நிலையம் திறந்திட அனுமதி வழங்கி வருகிறது.

இ த ன டி ப் ப டை யி ல் டெல்டா அல்லாத மாவட்டங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் திறக்கப்படும் நெல் கொள்முதல் நிலையங்கள் தவிர தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையத்திற்கு அதன் கோரிக்கையைப் பரிசீலனை செய்து ஒருசில இடங்களில் நெல் கொள்முதல் செய்ய அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

### நெல்லுக்கான ஊக்கத் தொகை!

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் சார்பில் தான் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் நெல் கொள்முதல் செய்கிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நடத்தும் நெல் கொள்முதல் நிலையங்களிலும் தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் நடத்தும் நெல் கொள்முதல் நிலையங்களிலும் ஒரே விலையில் தான் நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசு விவசாயிகளுக்கு வழங்கும் நெல்லுக்கான ஊக்கத் தொகையும் அவ்வாறே வழங்கப்படுகிறது.

தேசிய கூட்டுறவு நுகர்வோர் இணையம் நெல் கொள்முதல் செய்வது பற்றி நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின் போது நடந்த விவாதத்திலும் தெரிவித்துள்ளேன்.

ஆனால் இதை ஏதும் அறியாமல் அல்லது அறிந்தும் அறியாமல் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர், 2016-ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செய்யப்படும் நெல் கொள்முதல் பணி பற்றி இவ்வாறு கருத்து தெரிவித்திருப்பது சரிதானா என்பது பற்றிச் சிந்தித்துப் பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு விவசாயிகள் மற்றும் தொழிலாளர்களின் நலன் கருதித்தான் எந்த முடிவையும் எடுக்கும் என்பதை அவருக்கும் மற்றவர்களுக்கும் இதன் மூலம் மீண்டும் தெளிவு படுத்துகிறேன்.

இவ்வாறு அமைச்சர் அர.சக்கரபாணி தெரிவித்துள்ளார்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு நாளான நேற்று, புதுடெல்லியில் அண்ணா அவர்களின் திருவுருவப் படத்திற்கு தயாநிதிமாறன் எம்.பி. அவர்கள் மலர் மாலை அணிவித்து வணங்கியபோது எடுத்த படம்.

## சி.பி.ஏ.எம். என்னும் வர்த்தக வரியை எதிர்ப்பதால்

# இந்தியாவில் பொருளாதாரப் பாதிப்பை எப்படி எதிர்கொள்வது?

## மக்களவையில் தயாநிதி மாறன் கேள்வி!

புதுடெல்லி, பிப்.4-

ஐரோப்பிய ஒன்றியத்திற்கு இறக்குமதி செய்யப்படும் கார்பன் தீவிர பொருட்கள் மீதான "கார்பன் பார்டர் அட்ஜஸ்ட் மென்ட் மெக்கானிசம்" (CBAM) எனப்படும் வர்த்தக வரியை இந்தியா போன்ற வளரும் நாடுகள் எதிர்ப்பதால் ஏற்படும் வணிக விளைவு மற்றும் பொருளாதார பாதிப்புகள் என்னவென்றும். இந்திய அரசு கார்பன் உமிழ்வை குறைப்பதில் தனது உறுதிப்பாட்டைக் காட்ட, மாற்று நிதி உதவிகள் அல்லது ஊக்கத்தொகைகளை அளிக்க உள்ளதா என மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத்தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:-

ஐரோப்பிய யூனியனின் "கார்பன் பார்டர் அட்ஜஸ்ட் மென்ட் மெக்கானிசம்" (CBAM) எனப்படும் வர்த்தக வரியை இந்தியா எதிர்ப்பதால், அதனால் ஏற்படும் வணிக விளைவுகளைப் பற்றி துறை அமைச்சகங்களுக்கு இடையே விவாதம் அல்லது ஆலோசனைகள் நடந்துள்ளதா எனவும் அவ்வாறு நடைபெற்றிருந்தால், அதற்கான விவரங்கள் என்னவென தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார்.

உலகளவில் கார்பன் உமிழ்வை கட்டுப்படுத்தும் CBAM நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, அவ்வாறு கலந்தாலோசனை நடைபெற்றிருந்தால், அதற்கான விவரங்கள் என்னவெனக் கேள்வி எழுப்பினார்.

இந்திய அரசு கார்பன் உமிழ்வைக் குறைப்பதில் தனது உறுதிப்பாட்டைக் காட்ட, மாற்று நிதி உதவிகள் அல்லது ஊக்கத்தொகைகளை அளிக்க உள்ளதா? அப்படியிருந்தால், அதற்கான விவரங்கள் என்னவெனக் கேள்வி எழுப்பினார்.

இந்தியாவில் இரும்பு, சிமெண்ட் மற்றும் உரம் போன்ற கார்பன் அதிகம் பயன்படுத்தும் தொழில் துறைகளை உலகளாவிய பொருளாதார அதிர்வுகளிலிருந்து பாதுகாக்கவும், குறைந்த கார்பன் உமிழ்வு கொண்ட உற்பத்தி முறைகளை கடைப்பிடிக்கவும் அரசு என்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளது எனக் கேள்வி எழுப்பினார்.

CBAMக்கு பதிலளிக்கும் வகையில் வர்த்தக போட்டித் திறனையும் சுற்றுச்சூழல் நிலைத்தன்மையையும் அரசாங்கம் எவ்வாறு சமநிலைப் படுத்துகிறது எனக் கேள்வி எழுப்பினார்.

## வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ்

# புதிய சமுதாயக்கூடம் - வட்டாட்சியர் அலுவலகம் - ஒருங்கிணைந்த விளையாட்டு மையம்!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்!

சென்னை, பிப்.4-

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின்கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதி, விளாங்காடு பாக்கத்தில் புதிய சமுதாய நலக்கூடம், கொளத்தூரில் புதிய வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், முதல்வர் படைப்பகம் எனப்படும் "மக்கள் சேவை மையம் (Citizen Service Centre)", பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, எம்.கே.பி. நகரில் புதிய சமுதாய நலக்கூடம் மற்றும் ஆர். கே. நகர் சட்டமன்ற தொகுதி, தண்டையார்பேட்டையில் புதிய ஒருங்கிணைந்த விளையாட்டு மையம் (Tondiarpet Integrated Sports Centre) என 4 பணிகளை அமைச்ச ர் பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி நேற்று (3.2.2025) வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் மாதவரம் சட்டமன்ற தொகுதி, புழல் ஒன்றியம், விளாங்காடுபாக்கத்தில் ரூ.8.65 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளையும், கொளத்தூர் சட்டமன்றத் தொகுதி, பேப்பர் மில்ஸ் சாலையில் ரூ.49.50 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள வட்டாட்சியர் அலுவலகம், சார்பதிவாளர் அலுவலகம், முதல்வர் படைப்பகம் எனப்படும் "மக்கள் சேவை மையத்தின் (Citizen Service Centre)" பணிகளையும், பெரம்பூர் சட்டமன்றத் தொகுதி, எம்.கே.பி. நகர், சென்ட்ரல் அவென்யூ சாலையில் ரூ.19.24 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள புதிய சமுதாய நலக்கூடத்தின் பணிகளையும் மற்றும் ஆர்.கே.நகர் சட்டமன்ற தொகுதி, தண்டையார்பேட்டையில் ரூ.24.60 கோடி மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஒருங்கிணைந்த விளையாட்டு மையத்தின் (Tondiarpet Integrated Sports Centre) பணிகளையும் என 4 பணிகளை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு துவக்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மேயர் திருமதி.ஆர்.பிரியா ராஜன், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.சுதர்சனம், பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர், ஆர்.கே. நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே.ஜே.எபினேசர், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா , பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், சி.எம்.டி.ஏ. முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி ரஷ்மி சித்தார்த் ஜகடே, மத்திய வட்டார துணை ஆணையாளர் கே.ஜே. பிரவீன் குமார், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், மண்டலக் குழுத்தலைவர்கள் திருமதி.சரிதா மகேஷ்குமார், நேதாஜி உ. கணேசன், சி.எம்.டி.ஏ. தலைமைத் திட்ட அமைப்பாளர்கள் எஸ்.ருத்ரமூர்த்தி, ந.ரவிக்குமார், அ.பாலசுப்ரமணியன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வை.ஜெயக்குமார், கண்காணிப்புப் பொறியாளர் ராஜ மகேஷ்குமார், மாநகராட்சி மண்டல அலுவலர் ஏ.எஸ். முருகன், சரவணமூர்த்தி, செயற்பொறியாளர்கள் ராஜன் பாபு, உள்ளாட்சி பிரதிநிதிகள் புழல் எம். நாராயணன், சரவணன் ஐ.சி.எப்.முரளி, கே.சந்துரு, மகேஷ்குமார், விளாங்காடுபாக்கம் முன்னாள் ஊராட்சி மன்றத்தலைவர் பாரதி சரவணன், மாமன்ற உறுப்பினர்கள் டில்லிபாபு, யோகபிரியா தனசேகர், நாகராஜன், தாவுத்பீ, ஸ்ரீதணி, சாரதா, உள்ளாட்சி பிரதிநிதி புழல் எம்.நாராயணன், மாநகராட்சி மற்றும் சி.எம்.டி.ஏ அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



திருவள்ளூர் மேற்கு மாவட்டம் திருவள்ளூர் தொகுதி கடம்பத்தூர் அரசு மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 10 ஆம் வகுப்பு, 11ஆம் வகுப்பு, 12ஆம் வகுப்பு மாணவ – மாணவிகள் 240 பேர் பொது தேர்வு எழுத உள்ளனர் இவர்களுக்கு மாலையில் சிறப்பு வகுப்பு நடைபெறுகிறது. இதனை அறிந்த திருவள்ளூர் மேற்கு மாவட்ட துணை செயலாளர் டாக்டர் வி.சி.ஆர்.குமரன் ஒரு மாத காலத்திற்கு சிற்றுண்டி வழங்க நிதி உதவி தலைமையாசிரியை குமாரிகுட்டியிடம் வழங்கி மாணவ மாணவிகளுக்கு தேர்வு குறித்த கருத்துரையாற்றிா். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன், உதவி தலைமையாசிரியை ஜாய்ஸ்ராணி, ஆசிரியர்கள் பழனி, நெப்போலியன், கீதா, வாணி, பதிவு எழுத்தர் மணவாளன் உள்ளனர்.




தி.மு.க.

இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

**ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்**

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தலைமைக் கழகத்தின் ஒப்புதலுடன், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் அமைப்புகளுக்கு, இளைஞர் அணி அமைப்பாளர்–துணை அமைப்பாளர்களை மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாவட்ட வாரியாக நியமித்து வருகிறார்.

மண்டலம்–2 க்கு உட்பட்ட மாவட்டங்களில் நியமிக்கப்பட்ட இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், அந்தந்த மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பகுதி–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெறுகிறது. இரண்டாம் கட்டமாக கடலூர் கிழக்கு & கடலூர் மேற்கு ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 04.02.2025 செவ்வாய்க்கிழமை | காலை 9.00 மணி | கடலூர் கிழக்கு | மங்கையர்கரசி திருமண மண்டபம், வடலூர், கடலூர். |
| 09.02.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 3.00 மணி | கடலூர் மேற்கு | தொ.மு.ச. அலுவலகம், நெய்வேலி, கடலூர். |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 01-02-2025

